**Probate O.P.No.1 of 2019**

**நாள் 28.10.2025.**

**<u>மசா.1 திரு. தேவராஜன் த/பெ. இராமானுஜ முதலியார் என்பவரை மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யவிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1973க்கு பின்பு மடத்திலிருந்து பதிவு செய்து கொடுக்கப்பட்ட பத்திரம் எதுவும் என் தகப்பனாரிடம் இல்லை என்றால் சரிதான். இடத்தின் மொத்த விஸ்தீரனம் 10 ஏக்கர் 80 சென்ட் என்றால் சரிதான். 1992க்கு பிறகு இறந்த மூன்று மடாதிபதிகள் அந்த இடத்தில்தான் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். அதை தவிர்த்து அந்த இடத்தில் துளசி மாடம் ஒன்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி 10 ஏக்கரில் என் தகப்பனார் சுயமாக விவசாயம் செய்தாரா என்றால் ஆமாம். நானும் அங்கு சுயமாக விவசாயம் செய்து வருகிறேனா என்றால் ஆமாம். தாசில்தாரரிடம் நானோ என் தகப்பனாரோ விவசாய குத்ததைதாரர்கள் என்று எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இழப்பீடு கேட்டு மனு கொடுத்துள்ளோம் என்று சாட்சி தாமாக முன்வவந்து சொல்கிறார். கடைசியாக மடத்திற்கு எவ்வளவு வாடகை கொடுத்தோம் என்றால் என் தகப்பனார் இருக்கும்போது அண்டு ஒன்றுக்கு ரூ. 6000 கொடுத்தோம். தோட்டம் காஞ்சிபுரம் செங்கல்பட்டு பிரதான சாலையில் உள்ளது என்றால் சரிதான். என் தாயார் தோட்டத்தில் நேரடியாக பயிர் வைத்துள்ளாரா என்றால் என் தகப்பனாருடன் சேர்ந்து பயிர் வைத்தார். என் தகப்பானாருக்கு முன்பு என் தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் பெற்றோர் இறந்தபின்பு நான் உயிலை மாற்றி எழுதினேனா என்றால் இல்லை. என் தகப்பனார் காலத்திற்கு பின்பு உயிலை செயல்படுத்தலாம் என்று கடிதம் எழுதி கொடுத்தார். அத்திவரதர் காலத்தின்போது 4 ஏக்கர் நிலம் வாகனங்களை நிறுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதா என்றால் 2 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அசல் வழக்கு எண் 196/2019 என்ற வழக்கு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கையும் இந்த வழக்கையும் ஒன்றாக நடத்த வேண்டும் என்று ஒரு மனு தாக்கல் செய்யபட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1949 முதல் குத்தகைதாரர் என்று கூறினாலும் எந்த மடாதிபதியும் இந்து அறநிலைத்துறையிடம் அனுமதி பெற்று பத்திரமம் எழுதி கொடுத்தார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு

தெரியாது. 1999ல் ஒரு மடாதிபதி வந்தார் என்றால் ஒரு ஜீயரைதான் தெரியும். 1999ல் வந்த ஜீயரிடம் பதிவு பெற்ற குத்ததை பத்திரம் பெற்றோமா என்றால் இல்லை குத்தகை பணம் கட்டினோம். 2017ல் ஒரு மடாதிபதி வந்து தற்போது வரை உள்ளார் என்றும், அவரிடம் குத்தகை பத்திரம் பெற்றோமா என்றால் பத்திரம் இல்லை ஆனால் நீதிமன்றத்தில் பணம் செலுத்தி அதற்கான ரசீது பெற்றோம். எவ்வளவு பணம் செலுத்தினோம் என்றால் சுமார் ரூ. 1 லட்சம் கொடுத்தோம். மேற்படி பணத்தை மடத்திலிருந்து மடத்தின் சார்பாக என்னை செலுத்த சொன்னதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் ஆவணம் கொடுக்கவில்லை ஆனால் அந்த விவரம் அவர்களுக்கு தெரியும். மேற்படி விவரம் மடத்திற்கு தெரியும் என்பதற்கு எழுத்து மூலமான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தோட்டத்தின் கிழக்கு பக்கம் என் அண்ணன் வீடு கட்டியுள்ளாரா என்றால் ஏற்கனே இருந்த இடத்தை புதுப்பித்து கட்டியுள்ளார். என் தந்தை 2009ல் இறந்தார் என்றால் சரிதான். 1983லிருந்து இன்று வரை நாங்கள் வாடகை கொடுத்ததற்கு ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 2009 முதல் 2019 வரை வழக்கு உயிலை Probate செய்யாததற்கு காரணம் என்ன என்றால் அதை நடைமுறை படுத்த வேண்டும் என்பதற்கான விவரம் அப்போது எனக்கு தெரியவில்லை. அதை தெரிந்துகொண்ட பிறகு இந்த மனு வை தாக்கல் செய்தேன். நான் கூறும் கால கட்டத்தில் தோட்டம் சம்மந்தமான வழக்குகள் வாடகை பணத்தை வைப்பீடு செய்வதற்கு நிலுயையில் இருந்தது என்றால் சரிதான். அந்த வழக்குகளில் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட உயிலை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண் 196/2019 என்ற வழக்கில் நானும் என் சகோதரரும்தான் தரப்பினர்கள் என்றால் சரிதான். தற்போது இணை ஆணையர் அலுவலகத்தில் எங்களை இடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது எனக்கு உடல் நலம் சரியில்லை என்பதால் தெரியவில்லை. வாடகையை வைப்பீடு செய்வதற்கு தாக்கல் செய்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதைப்பற்றி தெரியாது. எங்களுக்கு குத்ததைதார் என்பதற்கு எந்த ஆவணமும் கிடையாது என்றும் என் தாயார் முன்பே இறந்துவிட்டதால் உயில் செல்லுபடி ஆகாது என்றால் சரியல்ல. வருவாய் நீதிமன்றத்தில் வாடகை வைப்பீடு செய்வதற்கு என் தந்தையோ அல்லது தாயாரோ அல்லது நாங்களோ முயற்சி ஏதேனும் செய்தோமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

ஒப்பம்/- தீப்தி அறிவுநிதி,

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்
காஞ்சிபுரம்